தனி இதழ்
ஒரு அணு
இலங்கையில் 10 சதம்

மலர் 1] [இதழ் 102

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்.. அண்ணாதுரை

THE "NAM NADU" A TAMIL DAILY THE OFFICIAL ORGAN OF: THE D.P.F

சந்தா விகிதம்:
1 வருடம் ரூ. 24—0—0
6 மாதம் ரூ. 12-8-0
3 மாதம் ரூ. 6—0—0
ஞாயிற்றுக்கிழமைகளில் இதழ் கிடையாது.

சென்னை: புரட்டாசி 24உ சனி (10—10—53) ★ ★ ★ வெளியூர்: புரட்டாசி 25உ ஞாயிறு (11—10—53)

ஆங்கிலத்தை அகற்றி இந்தியைப் புகுத்த தீவிரம் காட்டுவது பேராபத்து

(:)

"நமது மொழி, நமது பெருமை, நமது மொழியினர் என்ற கோட்பாடே இன்று தலைதூக்கி நிற்கிறது"

'இந்தி ஏகாதிபத்தியம்' என்பதற்கு எரிச்சல் கொள்ளுகிறவர் பிறர் மொழிப்பற்றை 'மொழி ஏகாதிபத்தியம்' என்று கூறுவது பொருந்துமா?

ஆங்கிலத்துக்கு ஆசி, வடமொழிக்கு வாழ்த்து, பிற மொழிக்கு சாபம்!

தங்கள் தங்கள் பகுதியில் உள்ள இந்தியே பரிசுத்தமானது எனும் இந்தி வெறி!

பிணியினும் கொடிய மருத்துவம் கூறும் மண்டலாதிபதி!

கனம் முன்ஷியின் முரண்பட்ட வாதம்!

பாட்னா, அக். 8—

"ஆங்கிலத்தை அகற்றவேண்டும் என்று நீங்கள் அடிக்கடி வலியுறுத்தி வருவீர்களானால்; அதனால் இந்திக்கு இலாபம் இல்லை; ஆனால், நஷ்டமுண்டு; தேசியம் மறைந்து போகும்; நெருக்கடிக்கு உள்ளாகும்; மாநில உணர்வு ஆக்கம் பெறும்."

"இன்றுள்ள பேராபத்து மொழியியம், மாநிலங்களின் மொழிப் பற்று, உயிர்த்து எழும் மாநிலப் பெருமை, மொழிவழி ஏகாதிபத்தியத்தை இயக்கும் உள் உணர்வு, 'நமது மொழியினர், மற்ற மொழியினர்' என்று மனவளத்தில் மக்களுக்குள் பிரிவினைச் சுவர் எழுப்புவது, இது தேசீயத்துக்கு உலை வைக்கும்."

"இந்த உயர்வு தாழ்வு கற்பித்தால் உருவாவது ஒரு மொழி அல்ல. பல மொழி. ஒவ்வொரு மாநிலமும் தனக்கென ஒரு இந்தி வகையை உண்டாக்கினால், அதன் முடிவு எதில் கொண்டு போய்விடும்?"

"இந்தப் பிளவைத் தடுத்து நிறுத்துவதற்குள்ள ஒரேவழி நம்மால் கூடுமானவரை இந்தி மொழியைப் பெரு வழக்கில் கொணர முயற்சி எடுத்துக்கொள்வதுதான்."

"இந்தியைத் தாய்மொழியாகக் கொண்ட மாநிலத்து இந்திக்கும், மற்ற மாநில இந்திக்கும், உயர்வு தாழ்வு கற்பிக்கும் முயற்சி ஓர் அபாய அறிகுறி.

பாரதீய இந்தி பரிஷத் என்னும் இந்தி மொழி பிரசார நிறுவனத்தின் 11-வது ஆண்டுக் கூட்டம், இன்று பாட்னா நகரில் நடைபெற்றது. அதற்கு, 'ஆரிய வட்டம்' என்ற ஒரு தனிச் சிறுநூலைக் காண வேண்டுமென்று பல ஆண்டுகளுக்கு முன்பே ஆசைப்பட்டவரும், சமஸ்கிருத வெறியரும், காங்கிரஸ் தலைவர்களில் ஒருவரும், தற்கால உத்தர பிரதேச கவர்னராக இருப்பவருமான கனம் கே. எம். முன்ஷி தலைமை வகித்தார். அவர் பேசியதில் உள்ள சிலவற்றை மேலே குறித்துள்ளோம். வேறு சில கீழே தரப்படுகிறது,—

"ஆங்கிலத்துக்குப் பதிலாக இந்தியை உடனடியாகப் புகுத்த வேண்டுமென்று, அடிக்கடி சிலர் வலியுறுத்தி வருவது மிகமிக ஆபத்தானதாகும். சாதாரண அறிவினருக்கு, இப்படி அவசரம் காட்டுவது, மிகச் சிறந்த நாட்டுப்பற்று நிரம்பிய முக்கிய கடமையாகப்படலாம்."

"இந்தியைப் பரப்புவதற்கு, அகில இந்தியாவிலும் இடைவிடாது பெருமுயற்சி செய்யப்பட்டு வருகிறது. ஆனால், இந்தி வளர்ச்சி, இயற்கையோடு இணைந்து இருக்க வேண்டுமேயல்லாது, வலியப் புகுத்தப்படக் கூடாது"

"மனித சமுதாயத்தின் ஒருமைப்பாட்டிற்கு, ஒருவரோடு ஒருவர் பழகுவதற்குள்ள அரிய சாதனம் மொழியேயாகும். பல ஆயிரம் ஆண்டுகளாக அந்த ஒருமைப்பாட்டை உண்டாக்கும் சக்தியாக இருந்து வந்தது சமஸ்கிருதமாகும். இதுபோலவே சில பகுதிகளில் இந்தியும் இருந்து வந்திருக்கிறது."

"கடந்த 150 ஆண்டுகளாக ஆங்கிலம், ஒருமைப்பாட்டை ஊக்கும் பெரியதோர் சாதனமாக இருந்து வந்தது."

"இந்தியைத் தாய் மொழியாகக் கொண்டுள்ள சில வட்டாரத்தினர், தங்களிடை வழக்கில் உள்ள இந்திதான் புனிதமான மொழி என ஏற்றுக்

(3-ம் பக்கம் பார்க்க)

பட்டினிப் போர் அவரைப் பாதிக்காதாம்!

விசால ஆந்திரம் பற்றி பண்டித நேரு

பம்பாய், அக் 9—

பண்டித நேரு, இன்று, இங்கு பேசுகையில், எந்த ஒரு மொழிவாரி மாநில அமைப்பையும் தனியாக ஆராய முடியாதென்றும், அதனால்தான், ஒரு உயர்தர கமிஷன் அமைத்து அதை ஆராய முடிவு செய்யப்பட்டிருப்பதாயும் தெரிவித்தார். இதில், மற்ற அம்சங்களைக் காட்டிலும், பொருளாதார அம்சத்தையே பிரதானமாகக் கருதவேண்டுமென்றும் அவர் சொன்னார்.

அந்த 'விசாலம்', இந்த 'விசாலம்' என்பவை யெல்லாம் மிக மிகக் கண்டிக்கத்தக்கவையாகும். மொழிவாரி மாநிலங்கள் அமைக்கும் போது, இந்தியாவின் ஐக்கியமோ, ஒற்றுமையோ குன்றாமல் பார்த்துக் கொள்வது மிக முக்கியம் என்றும், ஒவ்வொரு மாநிலத்தோரும் தனித் தனியாக பிரிவினைக் குரலைக் கிளப்புவது கண்டிக்கத்தக்கதென்றும் அவர் மேலும் சொன்னார்.

பிரிவினைக்காக கிளர்ச்சிகள் நடத்துவதும், உண்ணாவிரதம் இருப்பதும் பயனளிக்காது; அதுவும் என்னைப் பாதிக்காது என்றார்.

'மத்திய சர்க்கார் ஒழிக!'

'மொழிவழி மாநிலம் எங்கள் உடனடித் தேவை'

'தலைவர்களை விடுதலை செய்"

ஹூப்ளி, அக். 7—

கர்நாடக மொழிவழி மாநில அமைப்புக்கான அறப் போராட்டம் நேற்று முதல் ஹூப்ளியில் துவங்கப்பட்டுள்ளது. ஐதராபாத்தைச் சேர்ந்த 13 தோழர்கள், நகரத்தில் அமுலில் இருந்துவரும் தடை உத்தரவை மீறி, போலீஸ் அனுமதி பெறாமல் ஊர்வலமாகச் சென்றனர். "மத்திய சர்க்கார் ஒழிக!" "மொழிவழி மாநிலம், எங்கள் உடனடித் தேவை!" "தலைவர்களை விடுதலை செய்!" என்ற ஒலிகளை முழக்கிச் சென்றனர்.

தூத்துக்குடி தோழர்கள் ஜாமீன் மனு தள்ளுபடி

சென்னை, அக். 9—

தூத்துக்குடி தோழர்கள் கே. வி. கே. சாமி, ஆர். எஸ். தங்கப்பழம், எம். எஸ். சிவசாமி, நடராசன் ஆகியவர்களுக்கு இன்று ஐகோர்டில் நீதிபதி என். சோமசுந்தரம் அவர்களால் ஜாமீன மனு மறுக்கப்பட்டது.

இவர்கள் நால்வர் மீதும் சதிக் குற்றம் சாட்டப்பட்டிருக்கின்ற காரணத்தால், அவர்களை ஜாமீனில் வெளிவிடக் கூடாது என்று நீதிபதி கூறினார்.

'காக்கை பிடித்ததின் பலன்' கைமேல் கிடைத்துவிட்டது!

பக்தவத்சலரும், ராஜாராமரும் மாற்றுக்கட்சியினரை திட்டுவதில் இனி கடிவாளமில்லா குதிரைகள்

சென்னை, அக். 9—

எம். பக்தவத்சலம், கே. ராஜாராம், திருமதி ஜோதி வெங்கடாசலம் ஆகிய மூவரும் சென்னை மந்திரிகளாக நியமிக்கப்பட்டு இன்று பிற்பகலில் கவர்னர் முன்னிலையில் உறுதி எடுத்துக் கொண்டனர்.

எம். பக்தவத்சலத்திடம் விவசாயம், காட்டிலாகா, சமுதாய நலத் திட்டங்கள், தேசிய விஸ்தரிப்புத் திட்டங்கள் ஆகிய இலாகாக்களும், கே. ராஜாராமிடம், மாவட்ட ஆட்சி மன்றங்கள், நகராட்சி மன்றங்களின் பிரிவும் (ஸ்தல ஸ்தாபனம்), திருமதி ஜோதி வெங்கடாசலம் அவர்களிடம் மதுவிலக்கு, பெண்கள் நலவிருத்தி இலாகாக்களும் ஒப்படைக்கப் பட்டிருக்கின்றன,

ஐவர் சிறையில்!
இன்று
40-வது நாள்

நம் நாடு
தி.மு.கத்தின் இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை
சென்னை 10—10—1953 சனி

வெட்கப்படுகிறோம்!

ஆம்! வெட்கப்படுகிறோம்! நாம் மட்டுமா? ஒவ்வொரு கழகத் தோழர்களும் வெட்கப்படத்தான் வேண்டும்!

குருதி சொட்டச் சொட்ட மான் இனத்தைக் கொன்று தின்னும் இயல்புடைய வேங்கை, கொல்லாமை, கொன்று தின்னாமை எனும் அறநெறி குறித்துக் கூறக் கிளம்பினால் அதுவும் அச்சான்று புரச்சான்று மேற்கோள் காட்டி அறிவுரை கூற முன்வந்தால், கொல்லாமையையே வாழ்க்கை பேழுகக் கொண்டு வாழ்க்கை நடத்துபவர், வெட்கப் படாமல் வேறு எப்படி இருப்பது?

ஆட்டை அடித்துக் தின்று அகமகிழ்ந்து வாழ்ந்து வரும் ஓநாய், உயிர் போக்குதல் கூடாது—அடாது என்று அகிம்சா பரமோ தர்மம் குறித்து, சாட்சியம் பல சுட்டிக் காட்டி, சதுரங்கப் பேச்சுரை, அது கேட்டு, பிற உயிர் நீக்கும் மிருகத்தன்மையைக் கண்டித்து ஒதுக்கும் பண்பை, தங்கள் வாழ்வின் வழி காட்டியாகக் கடைப்பிடித்து ஒழுகுபவர், வெட்கப்படத்தானே செய்வர்!

ஆம்! வெட்கமும் படுவர்! புலியின் கொல்லாமை போதனையையும், ஓநாயின் அகிம்சா அறிவுரையையும் கேட்டு கைகொட்டிச் சிரிக்கவும் செய்வர்!

சென்னையின் ஓர் பகுதியில், காந்தி பிறந்த தின விழா இரண்டு நாளைக்கு முன் கொண்டாடப்பட்டுள்ளது. அதில சக்ரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் அவர்கள் கலந்து கொண்டுள்ளார் அவர். ஜீவாத்மாக்கள் உய்ப்பரத்துக்கு வழி காட்டிக் கொண்டிருக்கும்பொழுது, யாரோ ஒரு இளைஞர், அவர் கையில் கருப்புக் கொடி ஒன்றைக் கொடுத்தாராம். அந்த இளைஞர் நமது கழகத் தோழர் என்று சொல்லப் படுகிறது. அத்தோழரின் நெஞ்சுரம், கடமை உணர்ச்சி, பாராட்டுதலுக்கு உரியதே யானாலும், அவருடைய போக்கு, நடைமுறை, நமது கழகத்தின் நல்ல பெயருக்குக் களங்கத்தை உண்டாக்கவல்லதே யாகும் என்பதில் ஐயமில்லை அத்தோழரின் எண்ணம் தூய்மையானதாக இருக்கலாம்; இருந்தாலும் அச்சூழ்நிலையில் அந்த இளைஞரின் செயல், நமது கழகக் கோட்பாடுகளான கண்ணியம், கட்டுப்பாடு, அமைதி ஆகிய உயர் பண்புகளை மாசுபடுத்துவதாக இருக்கிறது என்பதில் சந்தேகமில்லை.

அத்தோழரின் நல்லெண்ணத்தை எப்படிப் பொருள் கொள்வதாக இருந்தாலும், அவருடைய செயல் நம்மை வெட்கப்படவே செய்கிறது. சிறையில் உள்ள நமது பொதுச் செயலாளரும், மற்றத் தலைவர்களும் இது கேட்டு மனம் புழுங்குவர், நம்மைப் போலவே வெட்கத்தால் வேதனைப் படுவர் என்பது முக்காலும் உண்மையாகும்.

கழகத்தின் கோட்பாடு பிரகடனக் கூட்டங்களுக்குச் சென்று, நமது அதிருப்தியைக் காட்டிக்கொள்வது என்பது அல்ல, முக்காலும் அல்லவே அல்ல. இந்த முறை காட்டு முறை! இது கூடாது! எதிர்காலத்தில் அறவே கூடாது!

ஆச்சாரியார் மேற்கொள்ளும் ஆட்சி நடைமுறைகளில் தான், நமக்கு அதிருப்தி இருக்கிறதே ஒழிய, அவருடைய தனிப்பட்ட வாழ்வைக் குறித்து, நமது கழகத்துக்கு எந்த வித அக்கறையும் இல்லை; கவலையும் கிடையாது. அவர் நல்லவராகவும் இருக்கலாம், அது அல்லவராகவும் இருக்க லாம். நமக்குக் கவலை இல்லை.

அவருடைய ஆட்சி முறையில், நாம் அதிருப்தி கொண்டால், அந்த அதிருப்தியை அவர் உணரச் செய்வதற்கு கருப்புக்கொடி காட்டுதல் என்பது மக்களாட்சிக் கொத்த நாகரீக முறையாக இருந்தபோதிலும், அவர் பேசும் கூட்டங்களில், தவறிய இளைஞரைப்போல நடந்துகொள்ள முற்படுவது இனி கூடாது—அடாது! இது குறித்து ஆச்சாரியார் கூறிய சாரமான சிலவற்றை நாம் வரவேற்கிறோம். அவரும், போனதுபோக, இனிமேலாவது, அவர் அப்பொழுது போதித்ததை அப்படியே தமது செயலிலும், பேச்சிலும் மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறோம். நிற்க.

இந்தியப் பிரதமர் நேரு அவர்களுக்குக் கருப்புக் கொடி காட்டிய நமது கழகத் தோழர்களைக் குறித்து, அந்தக் கூட்டத்தில் ஆச்சாரியார் குறிப்பிடும் பொழுது, 'முகத்தை மறைத்துக் கொண்டு கருப்புக் கொடி காட்டினார் சிலர்' என்று குறிப்பிட்டு இருக்கிறார். இப்படி ஆச்சாரியார் கூறுவதின் உள்ளர்த்தத்தை அந்த ஆர்வமிக்க இளைஞர் அறிந்து கொள்ளத் தவறிவிட்டார். 'எப்படியாவது எதிர்ப்பாளர்களின் கோபத்தை மூட்டி, பலாத்காரச் செயல்களில் ஈடுபடச் செய்து, அவர்களுடைய கழகத்தை, ஒழித்துக் கட்டவேண்டும்' என்ற அமைதியான சாணக்கியத்தை உள்ளடக்கிக் கொண்டிருக்கிறது ஆச்சாரியாரின் நச்சுரை என்பது, அந்த ஆர்வமிக்க இளைஞருக்குத் தெரியாது. தெரிந்திருந்தால், ஆச்சாரியார் குறிப்பிட்டுள்ளதுபோல ஆச்சாரியார் போன்ற நல்லவர்களைக் கண்ணால பார்ப்பதுகூட விரும்பத்தகாதது என்று எங்காவது சென்றுவிட்டு இருப்பார். அவரோ, இளைஞர்!

வெறும் வாயையே மென்றுகொண்டு இருக்கும் இயல்புடைய ஆச்சாரியார், பிடி அவல கிடைத்தால சும்மாவா இருப்பார்? வழக்கம்போல தூற்றல் பாணத்தைத் தாக்கி னும், அளவிலும் அதிகமாகவே இருக்கிறார்.

தி. மு. கழகக் கூட்டங்களில், அவர் கட்சியினர் வேண்டு மென்றே குழப்பம் செய்திருப்பதும், சொற்பொழிவாற்ற வரும் சிறந்த பேச்சாளர்களை அடித்துத் துன்புறுத்த, இது வரை எடுத்துக் கொண்டுள்ள அக்கிரம வெறிச் செயல்கள் ஏராளம். தேனீ சம்பவம் இதற்கு சிகரம்போல இருக்கிறது. தோழர் நெடுஞ்செழியன் அவர்கள் உயிரையே குடித்துவிட சாந்தவாதிகள் என்று சொல்லிக் கொள்ளும் மதுரை மாவட்ட காங்கிரஸ் கனவான்கள் புரிந்த திருவிளையாடல் அது.

ஆச்சாரியார், ஆட்சிப்பொறுப்பில் அப்பொழுது இல்லை. ஆனால், வெள்ளையர் ஆட்சிக் காலத்தில, அவர் முன்பு ஒரு நாள மாநில முதல் அமைச்சராக இருந்த நேரத்தில, அவருடைய கட்டாய இந்தியை எதிர்த்து, இராஜபாளையத்தில் ஒரு கூட்டம் நடைபெற்றது அதில கலந்துகொண்டவர்கள், ஆச்சாரியாரின் 'வானர சேனை'யில் இப்பொழுது உள்ளவர்கள் போன்ற ஏனோதானோக்கள் அல்ல. பேராசிரியா சோமசுந்தர பாரதியார், கி. ஆ. பெ. விஸ்வநாதம் ஆகிய சிறந்த அறநெறியினர் அந்த எதிர்ப்புக் கூட்டத்தில் கலந்து கொண்டனர். அந்தக் காலத்தில இருந்த காங்கிரஸ் 'வானர சேனைகள்', அவ்விரு பெரியார்களின் உயிரையும் குடித்துவிட குழப்பம் விளைவித்தன.

ஆச்சாரியாருக்கு இந்த இரு சம்பவங்களையும் நினைவுறுத்துகிறோம். கடுகு போன்ற ஒரு சம்பவத்துக்காக, பொது வாழ்வின் பரிசுத்தத்தைக் குறித்து மணிக் கணக்கில பேசும் ஆச்சாரியாருக்கு, பிற கட்சியினர் கூட்டங்களில் கலகப் பணி புரிந்துள்ளவர், புரிந்து வருகிறவர் யார் என்பதை எடுத்துக் காட்டுகிறோம். பொது மக்கள் இதை நன்கு அறிந்து இருப்பதால்; அவர்களுக்கு நினைவுறுத்த வேண்டிய அவசியம் எழவில்லை.

திருவொற்றியூர், சென்னை ஊழியர் மாநாடு, திருப்பூர் முதலிய இடங்களிலே ஆச்சாரியார் பேசினது, பொது வாழ்வைப் புனிதப்படுத்தாது. ஏற்கெனவே புழுத்து நாற்ற மெடுத்துக் கிடக்கிற பொதுவாழ்வை மேலும் நாற்றமெடுக்கச் செய்யவே உதவும்.

அந்தத் தோழர், காங்கிரஸ் கூட்டத்தில் நடந்து கொண்ட முறையற்ற செயலுக்கும் வெட்கப்படுகிறோம்! புலி போதிக்கும் கொல்லாமை போலவும், ஓநாய் உபதேசிக்கும் ஜீவகாருண்யம் போலவும், கலகப் பணியை விடாது விருப்பத்தோடு ஆற்றிவரும் ஆச்சாரியார், பொது வாழ்வின் புனிதம் பேசுவது குறித்தும் வெட்கப்படுகிறோம்! வேதனைப்படுகிறோம்! கைகொட்டி நகைக்கவும் செய்கிறோம்!

கழகத் தோழர்களுக்கு

இந்தியத் துணைக்கண்டத்தின் பிரதமர் நேரு, நமது திராவிடத்திற்கு வந்தார். சிற்சில இடங்களுக்குச் சென்றார் அவர் திராவிடர்களை இழித்துப் பழித்துப் பேசினார் என்பதறகாக, அதனால் தமிழர்கள்—திராவிடர்கள் பெற்றுள்ள மனப் புண்ணை, அவருக்கு உணர்த்த. அமைதியான முறையில் கருப்புக் கொடி காட்டுவது என, சில மாவட்ட தி. மு. கழகங்கள், தங்கள் தங்கள் தீர்மானப்படி முன்வந்தன. கண்ணியம், கட்டுப்பாடு, அமைதி ஆகியவற்றிற்கு பங்கம் இல்லாமல் கருப்புக் கொடி சம்பவம் வெற்றிபெற்று இருக்கிறது

இருந்தாலும் சிற்சில இடங்களில், காங்கிரஸ் ஊழியர்கள் எனப்படுபவர்கள், நமது கழகத் தோழர்களை காயப்படுத்தியுள்ளனர் படுகாயப் படுத்தியுள்ளனர். வருந்துகிறேன். அவர்கள் சிறு செயலுக்கு இரங்குகிறேன்.

இரண்டொரு இடங்களில நமது தோழர்களும் காங்கிரஸ் ஊழியர்களைப் பின்பற்றி நடந்து கொண்டதாகக் கேள்விப் படுகிறேன். வேதனைப்படுகிறேன். முன்னிலும் பன்மடங்கு வருந்துகிறேன்

இந்தச் செய்தியை சிறையில் உள்ள பொதுச்செயலாளரும், மற்ற முன்னணி வீரர்களும் கேள்வியுற்றால், மனம் புண்ணாகி இருப்பர்—கண்ணீர் சொரிந்திருப்பர்.

இனி, இத்துறையில், நமது தோழர்கள் காங்கிரசாரின் நடைமுறைகளைப் பின்பற்றுவது கண்டிப்பாகக் கூடாது—அம்முறை நமது கழகக் கோட்பாடுகளுக்கு முரணானது என்று எச்சரிக்கிறேன்.

தலைவர்களின் அதிருப்தியை, அதிருப்தியை உண்டாக்கின ஆள வந்தார்கள் உணர கருப்புக் கொடி காட்டுவது மக்களாட்சி முறைக்கு மாறுபட்டதாகாது. சட்டத்திற்குப் புறம்பானதும் அல்ல.

மனித அடிப்படை உரிமைகளிலே இதுவும் ஒன்று. காட்டு முறை அல்ல; உலகம் ஒருமிக்க ஏற்றுக்கொண்டுள்ள நாகரீக முறை.

பண்டிதர் நேருவை அவமதிக்கும் நினைப்புடனோ, இழிவு படுத்தும் சிறுமதியுடனோ, அவருக்குக் கருப்புக்கொடி காட்டவேண்டுமென்று சில மாவட்டக் கழகங்கள் தீர்மானிக்க வில்லை என்பதை ஆளவந்தார்களும், நம்மவரும் உணர்ந்திருப்பது நல்லது.

ஏ. கோவிந்தசாமி,
பொறுப்பாளர்,
தி. மு. கழக தலைமை நிலையம்.

நல்லக்குடி அறப்போர்

இன்று
89-வது நாள்

கல்லக்குடி அறப்போர் தலைவர் மு. கருணாநிதி, இராம சுப்பையா, மற்றும் பலர் சிறையில்
இன்று
88-வது நாள்

மைசூரில் ஜாதிவெறி

மற்போர் களத்தில் போலீசார் துப்பாக்கிப் பிரயோகம்

மைசூர், அக். 8—

தசரா பண்டிகையைப் போட்டி அரண்மனையில் நடைபெறும் மற்போர்க்களத்தில், ஹரிஜன குஸ்தி வீரர்களைத் தாக்க முயன்ற, குஸ்தியையே தொழிலாகக் கொண்டவர்கள்மீது போலீசார் இன்று துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். மூவர் மாண்டனர்; 13 பேர் காயமுற்றனர்.

ஹரிஜன் குஸ்தி வீரர்களைப் போட்டியில் கலந்துகொள்ள அனுமதித்ததை எதிர்த்தே இந்த ஆர்ப்பாட்டம் நடந்திருக்கிறது

இதனால், மைசூர் மாவட்ட காங்கிரஸ் கமிட்டி தலைவருக்கும் காயமேற்பட்டதாகத் தெரிகிறது.

திருமழிசையில் கண்டன கூட்டமும், ஊர்வலமும்

தோழர் ம. கே. பொருரன் தலைமையில் கண்டன ஊர்வலமும், தோழர் டி. க. சம்மந்தன் அவர்கள் தலைமையில் கண்டனப் பொதுக்கூட்டமும் நடைபெற்றது. பொதுக்கூட்டத்தில் தோழர்கள் சின்னசாமி, இ. ஆர். முகம்மது, டி. கே. பொருரன் ஆகியோர் புதிய கல்வித் திட்டத்தைக் கண்டித்தும், கல்லக்குடி தோழர்களை விசாரணையின்றி சிறையில் வைத்திருப்பதைக் கண்டித்தும், ஜாமீனில் விடக்கோரியும், தலைவர்கள் ஐவரையும் உடனடியாக யாதொரு நிபந்தனையும் இன்றி விடுதலை செய்யக் கோரியும் ஆச்சாரியார் ஆட்சியைக் கண்டித்தும் சொற்பொழிவாற்றினர்.

மாதவரத்தில் மந்திரிக்குக் கருப்புக் கொடி

சென்னை, அக். 8—

20—9—53-ல், நடைபெற்ற மாதவரம் பொதுநல கிராம சீர்திருத்த சங்கத் திறப்பு விழாவில் கலந்துகொண்ட சென்னை மந்திரி சஞ்சீவய்யா அவர்களுக்கு, அன்று மாலை 4 மணிக்கு மாதவரத்தில் தி. மு. கழக சார்பில் தோழர் டி. கோவிந்தசாமி தலைமையிலும், தோழர்கள் ஆர். தன்சிங், ஏ. ஜெயராஜ், பி. இ. வீரராகவன், மகிமைதாஸ் இவர்களின் மேற்பார்வையிலும் கருப்புக் கொடி நிகழ்ச்சி அமைதியான முறையில் வெற்றிகரமாக நடைபெற்றது. தோழர்கள் கோ. ஏழுமலை, கட்டை ஏழுமலை, மறைந்த தோழர் கோ தேசிங் அவர்களின் அண்ணியார லோகம்மாள் மற்றும் ஏராளமான தாய்மார்களும், பெரியோர்களும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

அவைகளுக்கும் 'மார்க்கெட்!'

கிளிகள், மைனா, மலைப் பிரதேசப் பட்சிகள் ஆகியவைகளுக்கு அயல் நாடுகளில் நல்ல கிராக்கி இருந்து வருகிறதாம்.

தூத்துக்குடி வழக்கு நிதி

★

முன் வசூல் ரூபாய்	387—2—0
தூத்துக்குடி எம். கோபால்ராசு	2—0—0
,, மாரிபாண்டியன்	1—0—0
,, கே எஸ். பதி	1—0—0
,, எம். ராசமணி	2—0—0
,, எம். வெள்ளைச்சாமி	1—0—0
,, கே பழனிசாமி	1—0—0
,, இரா. கலைச்செல்வன்	1—0—0
,, ம தொந்தியப்பன்	1—0—0
,, அ. வைமகவேல்	1—0—0
,, பெ துரைப்பாண்டியன்	1—0—0
,, வே. காசி	1—0—0
செவலை—மொரிங்கியூர் தி. மு. கழகப் பொதுக் கூட்டங்களில் வசூல்—பாலகுருசாமி மூலம்	4—4—0
வடஆற்காடு கொட்ட குப்பம் தி. மு கழக அனுதாபிகள்—வி. முனுசாமி மூலம்	14—0—0
திருவண்ணாமலை கா குப்புசாமி	1—0—0
பெங்களூர் புஷ்பந்தரகுப்பேட்டை ஜி. சின்னப்பன்	10—0—0
வேப்பலோடை அ. கு. அ. திருமலையப்பன்	2—0—0
சென்னை தண்டையார்பேட்டை வைத்தியர் வி ஏ. முத்தையா	5—0—0
நாமக்கல் வி எம். கே. பழனியம்மாள்	1—0—0
பாப்பநாய்க்கன் பாளையம் ஜி. எஸ். முனியம்மாள்	1—0—0
செய்யூர் எஸ். கணேசன்	1—0—0
மதுரை அ. ரத்தினம்	2—0—0
,, இ கண்ணையா	2—0—0
வடக்கனந்தல் தி மு. கழகம்	2—0—0
பொன்மலை பெ. சின்னசாமி	1—0—0
,, செ. வேணுகோபாலன்	1—0—0
,, செ. சிங்காரவேல்	1—0—0
,, ச. சங்கரநாராயணன்	1—0—0
,, ஆனந்தன்	1—0—0
,, சி. தர்மலிங்கம்	1—0—0
,, எஸ். ராமதேவ்	1—0—0
,, ஜி. கிருஷ்ணராவ்	1—0—0
,, கே. சீனிவாசன்	1—0—0
,, அ. திருஞானசம்பந்தம்	1—0—0
காஞ்சிபுரம் தியாகராயர் மன்றம் சார்பில் நடந்த பொதுக்கூட்ட வசூல்—தோழர் எஸ். எஸ் ராஜேந்திரன் மூலம்	32-10—1
கொழும்பு சண்முகவேல்	1—0—0
,, சிதம்பரம்	1—0—0
செங்கோட்டை பி. எப். சாமுவேல்	1—0—0
ஆத்தூர்—சேலம் சு சங்கரலிங்கம்	3—0—0
விருதுநகர் ரா. சிதம்பரம்	1—0—0
தாழையூத்து ச. சாமிநாதன் மூலம்	3—0—0
ஈரோடு அனுதாபி ஒருவர்	5—0—0
சென்னை பத்மநாபன்	1—0—0
பெரிய காஞ்சிபுரம் பி. சம்பந்தம்	4—0—0
வகுரம்பட்டி ஆர். ரங்கசாமி	5—0—0
குனிடமுத்தூர் கே. ஆர். சண்முகம்	10—0—0
தோழியர்கள் அருண்மொழி—பூங்கோதை ஆகியோர் கலந்துகொண்ட தி. மு கழக பொதுக் கூட்டங்களில் வசூல்—மேற்படியார் மூலம்:—	
முசலூர் தி மு. கழக பொதுக்கூட்டம்	10—0—0
நல்லமங்கலம் ,, ,,	5—0—9
தளவாய்புரம் ,, ,,	5—0—0
கொமக்தபுரம் ,, ,,	2—9—6
சிவகிரி ,, ,,	2—9—0
திருத்தங்கல் ,, ,,	4—3—0
சிவகாசி ,, ,,	20—0—0
ஸ்ரீவில்லிபுத்தூர் ,, ,,	10—0—0
விளாம்பட்டி (சிறுமி) மாரியம்மாள்	1—0—0
சென்னை, கொருக்குப்பேட்டை 5-வது வட்டத் தோழர்கள் அன்பளிப்பு	8—2—3
சேலம் சி. ஆர். அறிவளபம்	12—4—0
மேட்டூர் அணை அ. லட்சுமி	1—0—0
,, சாரதா	1—0—0
நன்னிலம் சி சின்னையன்	5—0—0
சிவகாசி டி. தங்கையா ஆரோன்	5—0—0
சென்னை கே. எம். ஏ. ரஜாக்	1—8—0
41. இ. அரிசிப்பாளையம் சேலம் இரா. சகநாதன்	5—0—0
தாராபுரம் ஆர். எம். கோவிந்தராஜுலு	5—0—0
ஓமலூர் எஸ். கே. தஸ்திகிர்	1—0—0
சேலம் எம். எம் இப்ராஹிம்	1—0—0
பூசாரிப்பட்டி கே ஏ எம். நற்குணன்	1—0—0
,, ஏ. முருகேசன்	2—0—0
,, ஆர். கோபால்	2—0—0
ஒரத்தநாடு எம். சிங்காரவேலன்	2—0—0
ஒரக்காட்டுப்பேட்டை தி மு. கழகத் தோழர்கள் சி. வி. எம். அண்ணாமலை மூலம்	5—0—0
திருமங்கலம் பெ. பெரியசாமி	5—0—0
விழுப்புரம் திருவள்ளுவர் வாசக மன்றம்	2—8—0
பம்பாய்—28 தாதர் சேனல் ஆர்ட் சில்க் மில்ல தொழிலாளர்கள் தோழர் எம். ஆர். சுப்பையா மூலம்	13—8—0
தோழர் எ. கோவிந்தசாமி எம் எல்.ஏ., அவர்கள் சுற்றுப் பயணத்தில் வசூலானது—மேற்படியார் மூலம்:—	
நாகர்கோயில் தி. மு. கழக பொதுக்கூட்டம் உண்டி வசூல்	36-10—9
நாகப்பட்டினம் நிர்வாகக் குழுவில்	6—3—9
மணப்பாறை தி. மு. கழக பொதுக்கூட்டத்தில்	9—4—3
தொன்னி-ம் ,, ,,	4—7—0
அவனியாபுரம் கோ. நடராசன் நன்கொடை	3—0—0
ஆக மொத்தம் ரூபாய்.	721-14—4

ஜாமீனில் வெளியான தூத்துக்குடி தோழர்கள்

(இதுவரை)

சென்னை, அக். 9—

இ. பி. கோ. 149, இந்திய ரயில்வே சட்டம் 128, ஆகிய பிரிவுகளின் கீழ் குற்றம் சாட்டப்பட்டு, ஐகோர்ட் உத்தரவுப்படி ஜாமீனில் வெளி வந்துள்ள தூத்துக்குடி தோழர்களின் பட்டியல்:

தோழர்கள் ராயப்பன், சம்சுதீன், மூக்கன், செல்லத்துரை, கே. எம். சாமியா பிள்ளை, ரெங்கைய நாடார், டிவேலு, நடராசன், குருசாமி, சிதம்பரம், துரைபாண்டியன், தங்கசாமி, சண்முகவேலு, வி. எம். நடராசன், சமதுர். சாமி நாடார், தாசன், பாண்டிய நாடார், குருசாமி நாடார், ஸ்ரீரங்கம், தங்கையா, ரத்தினம், புகழேந்தி, ராஜா நாடார், சவுந்தர நாடார், பொன்னுசாமி நாடார், சேஷபா, ராஜரத்தினம், தங்கவேலு, விஜயராசன், வெங்கடாசலம், சுப்பையா, திருமான், சாந்திராஜ் — சிவலிங்கம், பிச்சையா, தங்கசாமி, ராமசாமி நாடார், பழையமுத்து நாடார், ராஜா நாடார், சுப்ரமணிய நாடார், முத்தையா கோனார், செல்லையா நாடார், ஞானமுத்து நாடார், குரு—மாணிக்கம், தங்கவேல், காட்டார் நாடார், நாராயண நாடார், அருணாசல நாடார், பொன்னுசாமி நாடார், அமல்புஷ்பம், ஜம்புலிங்க நாடார், வேலாயுத நாடார், மகாலிங்க நாடார், அர்ச்சுன முத்து, ஆர் அருணாசல நாடார், மாடசாமி கோனார், வேலு நாடார், யேசுவடிய நாடார், முருகைய நாடார்.

கயானாவில் 'கப்சிப்' தர்பார்

வெள்ளை கவர்னரின் அடக்குமுறை ஆர்ப்பரிப்பு

ஜார்ஜ்டவுன், அக். 9—

பிரிட்டிஷ் கயானாவில், கவர்னர் ஸர் ஆல்பிரட் சேவேஜ், இன்று நெருக்கடி நிலைமையைப் பிரகடனம் செய்தார். பிரதம மந்திரி சி. ஜகன் தலைமையிலுள்ள இடதுசாரி மந்திரி சபையையும் கவர்னர் டிஸ்மிஸ் செய்தார்.

ஆறு மாதத்திற்குமுன் அமுலுக்கு வந்த அரசியல் சட்டத்தை, இன்றுமுதல் நிறுத்தி வைத்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

கவர்னரின் பிரகடனம் இன்று ரேடியோ மூலம் ஒலி பரப்பப்பட்டது.

சர்க்காரை, பொதுவுடைமையர்கள் குலைப்பதையும், பொது மக்கள் அமைதிக்கும், பொருளாதார நிலைக்கும் ஏற்பட்டிருந்த அபாயகரமான நெருக்கடியையும் தடுப்பதே தன் எண்ணம் என கவர்னர் சொன்னார்.

உதவியாளர்களைக் கொண்டு, தானே, ஆட்சி நடத்த விரும்புவதாகவும், தனக்குள்ள பிரத்தியேக அதிகாரத்தைப் பயன்படுத்த உத்தேசித்துள்ளதாகவும் அவருடைய பேச்சில் கவர்னர் குறிப்பிட்டார்.

அதன் பின்புதான் இடைக்கால சர்க்கார் அமைக்கப்படுமென்றும் அவர் தெரிவித்தார்.

கயானாவில் கவர்னரின் நடவடிக்கையை ஒப்புக்கொண்டு பிரிட்டிஷ்காலனி இலாகா இன்று ஒரு அறிக்கை விடுத்துள்ளது. அதில், பிரிட்டிஷ் துருப்புக்கள் போலீசுக்கு உதவி செய்யும் பொருட்டு அனுப்பப்பட்டுள்ளது.

கயானாவின் நிலைமை பற்றி, காலனி அமைச்சர் ஆலிவர் லிட்டில்டன் கூறுகையில், "பிரிட்டிஷ் காமன்வெல்த்துக்குள் ஒரு பொதுவுடைமை ஆட்சி ஏற்படுவதை நாங்கள் அனுமதியோம," என்று கூறியுள்ளார்.

கயானாவிற்கு, பிரிட்டன், போர்த் தளவாடங்களை அனுப்புவதை, ஏகாதிபத்திய எதிர்ப்பு மக்கள், வன்மையாகக் கண்டித்தனர்.

ஜனநாயக முறைப்படி ஏற்படுத்தப்பட்ட அரசாங்கத்தின் அமைச்சர், பொதுவுடைமை ஸ்தாபனங்களுடன் தொடர்பு கொண்டுள்ளமைக்காக, சர்க்காரை ஒழிக்குவது நியாயமல்ல என அவர்கள் கண்டிக்கின்றனர்.

ஆங்கிலத்தை......

(1 ம் பக்கத்தின் தொடர்ச்சி)

கொள்ளப்பட வேண்டுமென்று வழைகிறார்கள்.

"இந்த விழைவிலேயே மொழி வழித்தன்மை'யை ஊக்குவிக்கும் கருமிகள் நிரம்பி இருக்கின்றன".

"இதைத்தான் சிலர் 'இந்தி ஏகாதிபத்தியம்' என்று அக்கிரமமாகக் குறிப்பிடுகிறார்கள்.

பரவலாக இந்தி மொழி பேசப்படுகிறது என்பதற்காக மட்டுமே, இந்தி, இந்தியாவின் தேசிய மொழியாகக் கொள்ளப்படவில்லை; ஆனால் சமஸ்கிருதத்தின் ஆக்கம் இந்தியில் இருக்கிறது என்பது காரணத்தாலுமாகும்.

"ஆங்கிலம், ஏற்கெனவே செல்வாக்குள்ளது, வளமை மிக்கது, மிக மிகச் செலவாக்குடன் வளர்ந்துள்ளது, உலகத்தில் அதிக சக்தி கொண்டு முறை வழக்கில் இருப்பது. அகில இந்திய நிபுணத்துவத்தவம், ...டடம், உலக உறவு ஆகிய துறைகளில தனிச் சிறப்புடன் ஆங்கிலம் மிளிர்வதை ஒப்புக்கொள்வதற்கு நாம் தயக்கப்படுவதில்லை."

இன்றும் ஆரியமுகம்!

★

"He had seen amongs high class Braumms faces belonging to the Negro type or nearly belonging to the Mongolians or Aryans".

"உயர்ந்த ஜாதி பார்ப்பனர்களிடை நீக்ரோ முகம் படைத்தவர்களையும், கிட்டத்தட்ட மங்கோலிய அல்லது ஆரியத் தோற்றம் கொண்டவர்களையும் அவர் (சி. ஆர்.) பார்த்திருக்கிறார்".

—இந்து, 9-10-53

குறிப்பு:—இச்செய்தி முழுவதையும் தினமணி மொழிபெயர்த்தது. சுதேசமித்திரன் 'ஆரியன்' என்ற சொல்லை மறைத்து விட்டது.

****

கழகக் கூட்டங்கள்

★

நாமக்கல்:

13—10—53 செவ்வாய் மாலை
சி. பி. சிற்றரசு பேசுவார்

★

நெல்லிக்குப்பம்:

12—10—53 திங்கள் மாலை
பேச்சாளர்கள்:
இரே. இளம்வழுதி
A கோவிந்தசாமி M.L.A.,
தில்லை-வில்லாளன்
R பாலகுருசாமி
கவிஞர்-வாணிதாசன்

★

அனகாபுத்தூர்:

(பல்லாவரம் பக்கம்)

13—10—53 செவ்வாய் மாலை
தலைவர்: R. புரட்சிமணி
பேச்சாளர்கள்:
A. கோவிந்தசாமி M.L.A.
காஞ்சி-கல்யாணசுந்தரம்
முவை - R S. பாண்டியன்
இரா. கோவிந்தராசன்

பாராட்டுக் கூட்டம்

11—10—53 ஞாயிறு மாலை சேலம் வி. மார்க்கெட்டில் தோழர் எம். பி. சுப்ரமணியம் பி. ஏ., எம்.எல்.ஏ., தலைமையில் தோழர்கள் எஸ். கே. பேபி, பி. கந்தசாமி எம். எல். ஏ., ஏ. துரைசாமி எம்.எல்.ஏ, எம். கந்தசாமி எம்.எல்.ஏ. ஆகியோர், சிறை சென்ற தோழர்களைப் பாராட்டிப் பேசுவர்.

மதுரை தோழர்கள் வழக்கு

மதுரை, அக். 8—

நேற்று மாலை 5 மணிக்கு, மதுரை நகர் முதல் வகுப்பு நீதிபதி தங்கமணி நாடார் முன்னிலையில், 5—10—53-ம் தேதி இரவு கைது செய்து போலீஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டிருந்த நமது இயக்கத் தோழர்கள் என். முத்து, எம். அப்பாசாமி, கே. என். ராஜமான் உட்பட 16 பேரை போலீசார் ஆஜர் செய்தனர். தோழர்கள் மீது கிரிமினல் புரொஜர் கோட் 107, 112 ஆகிய செக்ஷன்கள் போடப்பட்டுள்ளன. 500 ரூபாய் சொந்தமான இரு நபர் ஜாமீன் பேரில் விடுவிக்கப்பட்டுள்ளனர். 22—10—53-ம் தேதி வாய்தா போடப்பட்டுள்ளது.

நமது இயக்கத்தின் முக்கிய தோழர்கள் எல்லாம் கைது செய்யப்பட்டிருந்தனர். அதே சமயம் ஊர், பேர் தெரியாத ரௌடிகள் இலர் காங்கிரஸ் பெயரால் 8 பேர் கைது செய்யப்பட்டு இதேபோல் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

தோழர்களின் சார்பில் அட்வகேட் டி. தர்மராஜ் சந்தோஷம் அவர்கள் ஆஜரானார்.

நெய்வேலி நிலக்கரிச் சுரங்கம்

சென்னை, அக். 9—

நெய்வேலி பழுப்பு நிலக்கரி சுரங்கப் பகுதிகளுள் யாரும் அனுமதியின்றி பிரவேசிக்கக் கூடாதென நெருட் அறிக்கை மூலம் சர்க்கார் ஒரு உத்தரவு பிறப்பித்திருக்கின்றனர். இவ்வுத்தரவு இம்மாதம் 6ம் தேதி முதல் அமுலுக்குவந்திருக்கிறது. மங்கல போலீசார், ராணுவத்தினர், மேற்படி இடத்தில் வேலை செய்வோர், சமபளம் வாங்கும் மாஜிஸ்திரேட்கள் ஆகியோருக்கு இத்தடையின்று விதிவிலக்களிக்கப்பட்டிருக்கிறது.

பொதுக் கூட்டங்கள்

திருப்பத்தூர்

திருப்பத்தூர் (இ.ரா.), செப். 29 27—9—53-ல், இவ்வூர் ஜோடி மைதானத்தில், தி. மு. கழகத்தின் சார்பில் மாபெரும் பொதுக்கூட்டம் தோழர் மா. சிதம்பரம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அவ்வமயம் தோழர்கள் மதுரை முத்து, தேவகோட்டை இதயமணி, கவிஞர் கண்ணதாசன், தோழியர்கள் பூங்கோதை, அருண்மொழி, பி. ஓ. எல்., ஆகியோர், தி. மு. கழகத்தின் அரசியல், பொருளாதார, சமுதாய விடுதலைப் போராட்டங்களைப் பற்றியும், ஆச்சாரியாரின் அடக்குமுறையைக் கண்டித்தும் பேசினார்கள். பிறகு, தோழர் கா. முகம்மதலி அவர்களால் கொண்டுவரப்பட்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

காரைக்குடி

காரைக்குடி, செப். 29— இன்று மாலை 7 மணிக்கு, இந்நகர் காந்தி சதுக்கத்தில், பாண்டியன் படிப்பகத்தின் சார்பில், தோழர் இராம. வெள்ளையன் தலைமையில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் எம். ஆர். கணேசன் அய்யாசாமி, கவிஞர் கண்ணதாசன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

சென்னிமலை

சென்னிமலை, செப் 30— 25—9—53-ல், குமரன் சதுக்கத்தில், தி. மு கழகப் பொதுக்கூட்டம் தோழர் ஏ. முருகேசன் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் கே. ராவணன், ஏ. ராசலிங்கம், ஈரோடு எம். சின்னப்பன், எல். அப்பாவு, சிற்றுளி ஏ. சுப்ரமணியம் ஆகியோர், இன்றைய ஆட்சிமுறையிலுள்ள கேடுகளையும், இளைஞர் காங்கிரஸ் என்ற போர்வையில் சிலர் செய்துவரும் காலித்தனத்தையும் கண்டித்துப் பேசினர்.

திருத்தங்கல்

திருத்தங்கல், அக். 5— இவ்வூர் தி மு. கழக 4-வது ஆண்டு விழா பொதுக்கூட்டம், 30-9-53-ல், பாண்டியன் பூங்காவில், தோழர் சண். வி செண்பகமூர்த்தி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அவ்வமயம் தோழர்கள் டி. வி. பச்சையப்பன், கே. எஸ். இலக்ஷ்மணன் இயக்கப் பாடல்கள் பாடினர்; ஏ. திராவிடமணி, மு. வசனப்பித்தன், தோழியர்கள் அருண்மொழி, பூங்கோதை ஆகியோர் சொற்பொழிவாற்றினர். உண்டியல்மூலம் வசூலான ரூ. 4-3-0வை தோழியர் அருண்மொழி, கசம் ஆத்தக்குடி வழக்கு நிதிக்காக அளிக்கப்பட்டது.

தென்காசி

4—10—53 காலை 9 மணிக்கு, தோழர் திருமலைக்குமார் தலைமையில், சைக்கிள் ஊர்வலம் ஒன்று தென்காசியிலிருந்து புறப்பட்டு, காசி பேஜர்பரம், எலஞ்சி ஆகிய ஊர்களுக்குச் சென்று, செங்கோட்டை செல்லும் பொழுது, திருவாங்கூர் லைசென்ஸ் இல்லாத காரணத்தால் ஊர்வலம் தடைபட்டது. அன்று இரவு 8 மணிக்கு, தென்காசி அனுப்புமண்டபத்தின் முன்பு பொதுக்கூட்டம் நடைபெறறது. தோழர்கள்: வைத்திலிங்கம், எம். எஸ். சுந்தரம், திருத்தங்கல் குருசாமி ஆகியோர் சொற்பொழிவாற்றினர். தீர்மானங்கள் பல நிறைவேற்றப்பட்டது.

மேட்டூர்

5—10—53-ல், தி. மு. கழகப் பொதுக்கூட்டம், தோழர் த ரா. அழகிரிசாமி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தோழர்

தி. மு. கழக செயற்குழு தேர்தல்கள்

★

மாங்குளம்

மாங்குளம் தி. மு. கழகச் செயற்குழுக்கூட்டம் வி. வி. பழனிச்சாமி தலைமையில் கூடியது. அது சமயம் தோழர்கள் பி திருப்பதி, எ. பி. அயோத்தி இருவரையும் மாவட்டப் பிரதிநிதிகளாக தேர்ந்தெடுக்கப்பட்டது. பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

அரூர்

8—10—53-ல், தோழர் எஸ். எல். முருகேசன் அவர்கள் தலைமையில் செயற்குழு நடைபெற்றது. அதுபோது, தோழர் எச். ஆர். வேதகிரி அவர்களை மாவட்டப் பிரதிநிதியாகவும், துணைச் சொலாளராக தோழர் எச். ஜி செங்குயன் அவர்களும், செயற்குழு உறுப்பினராக பி. சீதாராமன் அவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இவ்விருவிரும் தமிழரசுக் கழகத்திலிருந்து விலகியவர்கள்.

இலங்கை

5-10-53ல், தலவாக்கொல்லை தோட்ட தி. மு. கழகக் கிளையின் கூட்டம், தோழர் எம். ஏ. நல்லதம்பி தலைமையில் நடைபெற்றது. அதபோது, தோழர்கள் கதிர்வேல் செயலாளராகவும், கே. சின்னையா துணைச் செயலாளராகவும், ஏ. மாரிமுத்து பொருளாளராகவும், எம். நடேசன், எஸ். செல்லையா விளம்பர உறுப்பினர்களாகவும், எம். ஏ. நல்லதம்பி பொறுப்பாளராகவும் புது நிர்வாகிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

மந்திரிகள் போர் முழக்கம்

லண்டன், அக். 6— பிரிட்டிஷ் கயானாவில், மந்திரிகளே சர்க்கார் மீது யுத்தம் தொடுத்திருப்பதாகவும், இவர்களை அடக்கவும், கவர்னருக்கு உதவி அளிக்கவும் யுத்தக் கப்பல் ஒன்று அனுப்பப்பட்டிருக்கிறதென்றும் தெரிகிறது.

திசையின்விளை

தி. மு. கழக செயற் குழு கூட்டம் 3—10—53 சனி இரவு 8-30 மணிக்கு துணைச் செயலாளர் எம். எஸ். முத்துசாமி தலைமையில் நடைபெற்ற திசையன்விளை தி. மு. கழகச் செயற் குழு கூட்டத்தில் பல தீர்மானங்கள் நிறைவேறின.

கள் க கு. சின்னுசாமி, ஈரோடு தோழர் எஸ. அப்பாவு, என். எஸ. இளங்கோ ஆகியவர்கள் கழகக் கொள்கைகள் குறித்துப் பேசினர்.

ஏரல்

27—9—53-ல், ஊர்வலமும், தோழர் த. ரசேகரன் தலைமையில் பொதுக்கூட்டமும் நடைபெற்றது. தோழர்கள்:— ச. வீரபாகு, அலிசேக் மன்சூர், சி. பி. சிற்றரசு ஆகியோர் சொற்பொழிவாற்றினர். பல கண்டன தீர்மானங்கள் நிறைவேறின.

கொள்ளிடம்

6—10—53-ல் தோழர் ஆர். பாலகுருசாமி தலைமையில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர் எ. கோவிந்தசாமி, எம். எல். ஏ, புதுவை வரணன் ஆகியோர் பேசினர். உண்டியல் மூலம், ஆத்தூக்குடி வழக்கு நிதிக்கு வசூலான ரூ. 5-7-3-ஐ தோழர் கோவிந்தசாமி அவர்களிடம் கொடுக்கப்பட்டது.

சாத்தூர்

4—10—53-ல், சுப்ரமணியபுரம் திடலில் தோழர் செ. உ. பொன்னையா தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அதுசமயம், தோழர்கள் சன்பாட்சன், நடராஜன் ஆகியோர் பேசினர். முடிவில் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

'இடிந்த கோயில்'

திருச்சி, அக். 9— கல்லக்குடி அறப்போர் நிதிக்காக திருச்சி தி. மு. கழக சார்பில், தேவர் ஹாலில், அக். 3, 4-ந் தேதிகளில், புரட்சி நடிகர் எம். ஜி. ராமச்சந்திரன், தன் குழுவினருடன் நடித்த 'இடிந்த கோயில்' நாடகம் நடைபெற்றது.

புதுமையான கதை அமைப்பு, மக்கள் மனதைக் கவரும் நடிப்பு ஆகியவற்றுடன் கூடிய 'இடிந்த கோயிலை' பார்த்த மக்கள் பெரிதும் பாராட்டினார்கள். முதல் நாள் சனியன்று இரவு, நாடக முடிவில், தி. மு. கழக தலைமை நிலையப் பொறுப்பாளர் தோழர் ஏ. கோவிந்தசாமி, எம். எல். ஏ., அவர்கள், புரட்சி நடிகரைப் பாராட்டியும், நேருவின் போக்கு பற்றியும் பேசினார்.

இரண்டாம் நாள் ஞாயிறன்று நாடக முடிவில் தோழர் அம்பில் தர்மலிங்கம், எம். என். மணி ஆகியோர் தி மு. கழகத்தின் சார்பில் புரட்சி நடிகருக்குத் தங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொண்டனர். தோழர் மதுரை எஸ். முத்து அவர்கள் புரட்சி நடிகரைப் பாராட்டிப் பேசினார்.

இறுதியில் தோழர் எம். ஜி ராமச்சந்திரன் அவர்கள் தன் குழுவினரின் சார்பாக அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்

இந்த இரண்டு நாடகங்களிலும் மொத்தம் ரூ. 3,849 வசூலானதாக அறிவிக்கப்பட்டது.

—"தீப்பொறி", திருச்சி.

கோழைத்தனம்

திண்டுக்கல், அக். 9— திண்டுக்கல் நகர வட பகுதி செட்டி தெருவில் பறந்து கொண்டிருந்த தி. மு. கழகக் கொடியை சில காங்கிரஸ் கூலிகள், திட்டமிட்டு 6—10—53ம் நாள் இரவு நடுநிசியில் திருடிக் கொண்டு சென்றுவிட்டனர். சம்பவத்தைக் கேள்வியுற்ற கழகத் தோழர்கள் அங்கு சென்று பார்வையிட்டனர். உடனடியாகப் போலீசில் இதுபற்றி புகார் செய்யப்பட்டது.

இலங்கைத் தோழர்

தோழர் ஏ எஸ். மனவைத் தம்பி முன், 6—10—53ல் செல்லைக் கோர்ட்டில், தோழர்கள் கே வி. கே. சாமி, எம். எஸ் சிவசாமி, எஸ். நடராசன், தங்கப்பழம், ஐகோர்ட்டில் ஜாமீனில் விடப்பட்ட தோழர் எம். ரத்தினம் ஆகியோரை சந்தித்துப் பேசினார்.

திரு. வி. க. மன்றத் திறப்பு விழா

விழுப்புரம், அக். 5— முற்போக்கு இளைஞர்களால், திரு. வி. க. மன்றம் தோழர் பி. அருள்தாஸ் அவர்கள், தோழர் வி. ஆர். நாகராஜன் பி. ஏ., பி. எல்., எம். எல். ஏ, அவர்கள் தலைமையிலும், டாக்டர் டி. தியாகராசன் (நகர மன்ற துணை தலைவர்) அவர்கள் முன்னிலையிலும் திறந்து வைத்தார் படத்தினை, தோழர் வேலாயுதப் திறந்து வைத்தார். தோழர்கள் வீரபாகு, ராசன் ஆகியோர் பேசினார்.

மறைவு

குன்னூர், அக். 1— மதுரை மாவட்டம், பெரியகுளம் வட்டத்தைச் சேர்ந்த குன்னூர் தி. மு. கழக அங்கத்தினர் அ. அழகர்சாமி அவர்கள், இயற்கை எய்தியதை வருத்தமுடன் அறிவிக்கிறோம்.

* * *

குள்ளப்பட்டி, அக். 2— குள்ளம்பட்டி தி. மு க. கிளையின் செயற்குழு உறுப்பினர் தோழர் ர. ராமச்சந்திரன் இன்று மாலை 8-45 மணிக்கு, இயற்கை எய்திய செய்தி கேட்டு வருந்துகிறோம்.

திரு. வி. க. மறைவு: இரங்கற் கூட்டங்கள்

வாணியம்பாடி, செப். 28— இராணிப்பேட்டைக் கடுத்த வாணியம்பாடி கிராம சேவை சங்கத்தின் ஆதரவில் சமீபத்தில் தமிழ்ப் பெரியார் திரு. வி. க மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்க, மாபெரும் பொதுக் கூட்டம் நடைபெற்றது. பள்ளி மாணவ மாணவிகள் திரு. வி. க. படத்துடன் மௌன ஊர்வலம் வந்தனர். பள்ளி விடுமுறையளிக்கப் பட்டது.

பொதுக் கூட்டத்திற்கு தோழர் துரைசாமி தலைமை வகித்தார். திரு. வி. க. தமிழ் நாட்டிற்கும், தமிழ் மொழிக்கும், சமூகத்திற்கும் செய்துள்ள சேவைகளைக் குறித்து தோழர்கள் நாராயணசாமி, கிருஷ்ணன், கிருஷ்ணசாமி ஆகியோர் பேசினர். அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பின்னர் கூட்டம் கலைந்தது.

வாலாஜா

தோழர் வீரராகவன் தலைமையில் அனுதாபக் கூட்டம் நடைபெற்றது. திரு. வி. கவின் சேவைகளைக் குறித்து தோழர்கள் உயர்நிலைப் பள்ளித் தமிழ் ஆசிரியர்கள் கணபதி, எ. கு. நாராயணசாமி, ம. க. ஜெயராம நாயுடு ஆகியோரும், வரதராசன், சி. அ. வரதராசன், ஜானகிராமன் ஆகிய பலரும் பேசினர். அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றத்திற்குப் பின் கூட்டம் கலைந்தது.

இராணிப்பேட்டை

இராணிப்பேட்டை பாரி சிப்பந்திகள் சங்கத்தின் ஆதரவில் ஜார்ஜ் டேவிட் தலைமையில் திரு. வி. க. மறைவுக்கு அனுதாபக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் நாதன், லக்ஷ்மணசாமி ஆகியோர் பேசினர். மறைவுக்கு அனுதாபம் தெரிவித்து கூட்டம் கலைந்தது.

ஆற்காடு

ஆற்காடு சுந்தர நிலயத்தின் சார்பில் தோழர் வல்லம். வைத்திலிங்கம் பிள்ளை தலைமையில் இரங்கற் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் எஸ். கன்னையன், அண்ணாமலை பல்கலைக் கழக தமிழ்ப் பேராசிரியர் எஸ. வி. ராமலிங்கம், உயர்நிலைப் பள்ளித் தமிழாசிரியர் சண்முகத் தேசிகர், சுந்தர உடையார், பத்மநாபன், வையாபுரி, அழகு சுந்தரம், மணிஎழிலன் ஆகியோர் திரு. வி. க.-வின் சேவைகளைக் குறித்துப் பேசினர். மௌன வழிபாட்டிற்குப் பின்னர் கூட்டம் கலைந்தது.

கடலூர்

4—10—53-ல், கடலூர் என். ட வன்னியர் பாளையத்தில் தோழர் இரெ. இளம்வழுதி, எம். ஏ., பி. எல், அவர்கள் தலைமையில் நடந்த திரு. வி. க. அனுதாபக் கூட்டத்தில், பல தீர்மானங்கள் நிறைவேறின.

பம்பாய்

30—9—53-ல், தாராவி பு. வ. சால் சமவெளியில் திரு வி. க. மறைவு குறித்து, தாராவி பகுதியில் வாழும் தமிழர்களடங்கிய பிரிவாற்றுமைக் கூட்டம் நடைபெற்றது. தோழர் ஏ. அரங்கநாதன் தலைமையில், தோழர் கே. எம். சுவாமிநாதன் இரக்கப்பாவோடு "ஆரம்" மாயிற்று. அதுபோது "தாராவியிலுள்ள தமிழர்களடங்கிய இப் பொதுக்கூட்டம் காலஞ் சென்ற திரு. வி. க. அவர்களுடைய பிரிவுக்காக வருந்துகிறது." என்னும் தீர்மானத்தை தோழர் இரா. இ. வேலன் அவர்கள் வாசித்தார். தோழர்கள் கே. எம் கோபால், கே. சங்கரன், முருகேசன், திரு. ந. சிவபாண்டியன தீர்மானத்தை ஆதரித்துப் பேசினர்.

தமிழ்ப் பெரியார் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்துள்ள கழகங்கள்

தோழமைக் கழகம் அரிசிக்கரை; அடையாறு தாழ்த்தப்பட்டோர் கழகம்; கரூர் தி. மு. கழகம்; பாரதி மன்றம், மணப்பாடு; வ. பு. அ சவுந்திரபாண்டியன் படிப்பகம், அருப்புக்கோட்டை; இளைஞர் வாலிபர் கழகம், பூவாளூர்; தி. மா. மு. கழகம், கூறைநாடு, மாயூரம்; சித்தூர் அரசியலார் தமிழ் மாணவர் கூட்டம்; ஆம்பூர் நகர தி. மு. கழகம்; முகவை வெளிப்பட்டினம் தி மு. கழகம்; சென்னை 23வது வட்ட தி. மு. கழகம்; பெரம்பூர் தி. மு. கழகம்; சிவதாபுரம கிராம சங்கம்; சென்னிமலை தி. மு. கழகம்; கலைக் கழகம், கும்பகோணம்; எழுச்சி மன்றம், கோவை; மேலப்பாடி தி. மு. கழகம்; குமாரகுப்பம் தி. மு. கழகம்; நெல்லை தி. மு. கழகம்; காதக்கோட்டை தி. மு. கழகம்; நாரப்பு வேளப்பூண்டி தி. மு. கழகம்; பம்பாய் உரிமை வளர்ச்சிக் கழகம்; மாரங்கியூர் தி. மு. கழகம்; வள்ளுவர் கலைக் கழகம், ஏழுகிணறு சென்னை; பெங்களூர் தி. மு. கழகம்; ஆம்பூர், திருவள்ளுவர் வாசகசாலை, மறைமலை அடிகள் நூல் நிலையம் பெரம்பூர்; பொன்னேரி தி. மு கழகம்; சீர்திருத்த வாலிபர் சங்கம், பீமநகர், திருச்சி; கைவல்யம் நினைவுப் படிப்பகம், தல்லாகுளம்; வள்ளுவர் மன்றம், நெல்லிக்குப்பம்; தி. மு கழகம் மாதவரம்;

விளக்கை குமன் மன்றம்; நாகர்கோயில், வடசேரி மனோன்மணி சுந்தரனார் மன்றம்; பாண்டியன் பகுத்தறிவுப் படிப்பகம், காரைக்குடி; செல்வபுரம் தி. மு. கழகம்; மாத்தளை நகர தி. மு கழகம்; சூலூர் தி. மு. கழகம்.

தி. மு க. வனவாசி; தி. மு. கழக (கிளை) அம்மாப்பேட்டை, சேலம், திருப்புத்தூர் முனிசிபல், நெகமம்; தி மு. க; தோழமைக் கழகம், சேப்பாக்கம், சென்னை; வ. உ. சி. இளைஞர் கழகம், சேதுப்பட்டு; கர்னாடக மாகாண தமிழர் உரிமை சங்கம், பெங்களூர்.

அயோத்தியாபட்டினம் தி. மு. கழகம்; முத்தமிழ் கலா மன்றம், இராயபுரம்; செங்குந்த மகாஜன சங்கம், சென்னை; தண்டையார்பேட்டை, தி. மு. கழகம்; அரசங்குடி சவுந்தர பாண்டியன் படிப்பகம்; சேலம் மாவட்ட டெக்ஸ்டைல் தொழிலாளர்கள்; குட்டிமேடு தி. மு. கழகம்; சவுந்திர பாண்டியனார் படிப்பகம், பம்பாய்; முசலூர் தி. மு. கழகம்; பொய்க்கர் தி. மு. கழகம், பம்பாய்; அயன்புரம் பாரதிதாசன் நூல் நிலையம்; ஓரக்காடு இளைஞர் முன்னேற்றக் கழகம்

திரு. வி. க. நினைவு நாள் நாடகம்

28—9—53 இரவு 10-30 மணியளவில், மாயூரம் தாலுகா மேல்காஞ்சநாட்டுத் தெருவில், கிடங்கல் தோழர் கே. ஆர். சம்பந்தம் பி ஏ., எம். எல். ஏ., அவர்கள் தலைமையில் திரு வி. க. நினைவு நாடகம் நடந்தது. தலைவர் பேசும்போது திரு. வி. க-வின் மாண்பை விளக்கினார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, நாரியணா செட்டித் தெரு, இராயபுரம்) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.